8 ஏப்ரல் 2018

# Newbec

NEW WAY OF BEING CHURCH

பாஸ்கா காலம் 2ம் ஞாயிறு

எதிர்நோக்கம் கொண்ட சீடர்களாகுவோம்




> மனிதன், ஆசிரியர்களைக் காட்டிலும் சாட்சிகளை நம்புகிறான், அவன் ஆசிரியர்களை நம்பினால், அது அவர்கள் சாட்சிகளாக இருப்பதால்.
>
> - திருத்தந்தை 6ம் பவுல்

இந்த ஞாயிற்றுக்கிழமை நற்செய்தியில், இயேசுவின் சீடர்களில் ஒருவரான தோமா, சாவிலிருந்து இயேசு உயிர்த்ததையும் இதர சீடர்களுக்குக் காட்சி அளித்ததையும் நம்ப மறுக்கிறார். இதனால்தான், விசுவாசத்தில் குறையுள்ளோரையும் விசுவாசப் போதனையில் சந்தேகம் கொள்வோரையும் தோமாவிற்கு ஒப்பிடுவோம். ஆனால் சற்று ஆழமாக பார்த்தால், விசுவாசக் காரியத்தில் தெளிவையும் உண்மையையும் நாடுவோரையும் தோமாவிற்கு ஒப்பிடலாம். பல்வேறு எண்ணங்களும் கருத்துகளும் மலிந்து கிடக்கும் இன்றைய உலகச் சூழ்நிலையில், சில சமயங்களில் கருத்துத் தடையும் குழப்பமும் ஏற்படுவதால், தோமாவைப் போல் விசுவாசத்தின் அம்சங்களை நேர்மையாகவும் ஆழமாகவும் சிந்திக்க வேண்டியுள்ளளது.

ஆம், விசுவாசம் தொடர்புடைய கேள்விகள் அனைத்தும், காரண–காரியத்தாலும் அறிவாலும் மட்டும் விளக்கி விட முடியாது. இயற்கையாகவே நம்மிடம் இருக்கும் ஆற்றலை பயனுள்ள வகையில் பயன்பயடுத்திக் கொள்வதற்கு பல தடைகள் இருக்கின்றன. ஆயினும் கடவுள் கொடுத்துள்ள அறிவைப் பயன்படுத்தி உண்மையை நாம் நாடலாம். இயேசு உயிர்த்தெழுந்து விட்டார் என்பதற்கான ஆதாரத்தை தோமா கேட்ட போது, அவரது விசுவாசக் குறைவுக்காக கடிந்துக் கொண்டாலும், இயேசுவே முன்வந்து தோமா தேடும் ஆதாரத்தைக் காட்டினார். நேரில் பார்த்த தோமா நம்பினார்.

இயேசு உயிர்த்து விடடார் என்பதை தோமா நம்புவதற்கு ஆதாரமாக அவர் முன் தோன்றினார் இயேசு. அவ்வாறே கிறிஸ்துவின் மீது மற்றவர்கள் நம்பிக்கை வைப்பதற்கு நாம் யார் மற்றும் நாம் விசுவசிப்பது யாது என்பதற்கான ஆதாரத்தை முன்வைக்க வேண்டுமென கிறிஸ்துவர்களாகிய நம்மிடம் கேட்கப்படுகிறது. இதனை நமது சொல், செயல் வழி நாம் செய்து காட்ட வேண்டும். இன்றைய முதல் வாசகத்தில், மற்றவர்கள் மீது அக்கறை உண்டு என்பதன் அடையாளமாக, முதல் கிறிஸ்துவர்கள் தங்களது உடைமைகளைப் பகிர்ந்து கொண்டதன் மூலம் தங்களது விசுவாசத்தின் ஆதாரத்தைக் காட்டினார்கள். கடவுளை அன்பு செய்து, அவரது கட்டளையைக் கடைப்பிடிப்பதன் மூலம், ஒருவருக்ககொருவர் கொள்ளும் அன்புக்கு ஆதாரமாக காட்ட முடியும் என இரண்டாவது வாசகத்தில் யோவான் கூறுகிறார். சுருக்கக்கூறின், கிறிஸ்துவர்கள் **சொல்வது போல் வாழ வேண்டும்.** இன்று, பொதுவாக கத்தோலிக்கர்கள் குறிப்பாக இளைஞர்கள், முன்னுதாரண மனிதர்களைத் தேடுகின்றனர். அச்சமற்ற இயேசுவின் சீடர்களை அவர்கள் தேடுகின்றனர். நமது வாழ்க்கை வழி நாம் முன்வைக்கும் ஆதாரம், உண்மையிலேயே கிறிஸ்துவில் நாம் மீட்படைந்திருக்கிறோமா என்பதைக் காட்டிவிடும். ✝

**வாரம் ஒரு வசனம்**

**சொல்வது போல் வாழ வேண்டும்.**

INTERNAL CIRCULATION ONLY
BUL 14/2018

*Published by:* Peninsular Malaysia Pastoral Team
api@archkl.org

*Print:* Steno Print Sdn Bhd
*Design:* The Mustard Seed Studio

**மினவுதல் மாதா தேவாலயம்**
85 A, ஜலான் யாம் துவான், 70000 சிறம்பான்
தொ.பே. 06-762 4468 /763 4934/767 7542
தொ.நகல்: 06-767 7544
Email: serembanvisitaion@gmail.com
Website: www.visitationseremban.org
பங்கு குருவானவர்: மறைதிரு. ஜோர்ஜ் ஹரிசன்
உதவி பங்கு குருவானவர்: மறைதிரு. அண்ட்ரூ கூய்

*2018 ஆம் ஆண்டின் கருப்பொருள்*
***எதிர் நோக்கு கொண்ட சீடர்களாகுவோம்.***
*2018 ஏப்ரல் (பங்குனி) மாதத்தின் கருப்பொருள்:*
***கிறிஸ்துவில் மீட்கப்பட்டோம்***
**மினவுதல் தேவாலயத்தின் 170 ஆம் ஆண்டை நோக்கிய பயணம்**
**(1848 - 2018)**

**பங்கு அலுவலக நேரம்**
திங்கள் - வெள்ளி: காலை 8.30 - மாலை 5.30
சனி: காலை 8.30 - மாலை 7.30
ஞாயிறு: காலை 8.30 - பகல் 3.00
(ஒவ்வொரு சனி, ஞாயிறு திருப்பலி நடைபெறுவதற்கு 30 நிமிடத்திற்கு முன் ஒப்புரவு அருளடையாளம் வழங்கப்படும். குருவானவருக்கு நேரம் இருந்தால்)



**இவ்வாரத்தின் நிகழ்ச்சி நிரல்:: ஏப்ரல் சனி 07 -04-2018 - ஞாயிறு 15 -04-2018 வரை**
**இறை இரக்கத்தின் ஞாயிறு (ஆண்டு இரண்டு)**
திரு.பணி: 4:32-35 திருபாடல்:117: 2-4, 16அ, 17-18, 22-24; 1 யோ 5:1-6; யோவான்:2): 19-31
**"ஆண்டவருக்கு நன்றி செலுத்துங்கள்; ஏனெனில் அவர் நல்லவர்; என்றென்றும் உள்ளது அவரது பேரன்பு"**

| | | | | |
|---|---|---|---|---|
| சனி | 07 | 5.00 மாலை<br>5.30 மாலை<br>5.45 மாலை<br>6.00 மாலை | செபமாலை<br>இடைவிடா சகாய அன்னை<br>நற்கருணை ஆசீர்<br>திருப்பலி (ஆ) புனித யோசேப்பு | |
| ஞாயிறு | | 7.00 காலை<br>9.00 காலை<br>11.00 காலை<br>1.00 பகல் | திருப்பலி (தமிழ்) பு.யோசேப்பு & பியொ<br>திருப்பலி (ஆங்) பு.ஸ்தனிஸ்லாஸ்<br>திருப்பலி (சீனம்) மாலை 4.30தித்தி<br>திருப்பலி (தே மொ) | மறைக்கல்வ<br>(த) காலை 8.45 - 10.15; (சீ) காலை 9.00-10.30 (ஆ) காலை 10.45 - 12.15<br>(தேமொ) 10.45 -12.15<br>முதியோர் கிறிஸ்துவ புகுமுக வகுப்பு ((முகிபுவ)<br>காலை 9.00-10.30(த) காலை 11.00 - 12.30 (தேமொ) காலை 110.00-12.30 (ஆங்கிலம்)<br>காலை 9.00-10.30(சீனம்)<br>**காலை 10.30 - 14 ஆம் பொதுத் தேர்தலையொட்டி கூட்டம் - மினவுதல் தேவாலய மண்டபம் அனைவரும் வருக!** |
| திங்கள் | 09 | 6.45 கா | திருப்பலி | |
| செவ் | 10 | 6.45 கா | திருப்பலி | |
| புதன் | 11 | 6.45 கா | திருப்பலி | |
| வியா | 12 | 6.45 கா | திருப்பலி | |
| வெள் | 13 | 6.45 கா | திருப்பலி | |

**பாஸ்கா காலத்தின் மூன்றாம் ஞாயிறு**
திரு.பணி: 3:13-15, 17-19; திரு.பாடல்: 4:16:8; 1 யோவான்: 2: 1-5; லூக்கா 35-48
**"உமது முகத்தின் ஒளி எம்மீது வீசச்செய்யும் ஆண்டவரே"**

| | | | | |
|---|---|---|---|---|
| சனி | 14 | 5.00 மா<br>5.30 மா<br>5.45 மா<br>6.00 மா | செபமாலை<br>இடைவிடா சகாய அன்னை<br>நற்கருணை ஆசீர்வாதம்<br>திருப்பலி (ஆ) (இளைஞர் குழு) | |
| ஞாயிறு | 15 | 7.00 கா<br>9.00 கா<br>11.00 கா<br>01.00 பகல் | திருப்பலி (த)பு, இரேனியுஸ்<br>திருப்பலி (ஆ) (பு.பிரான்சிஸ்)<br>திருப்பலி (சீனமொழி) மாலை 4.30தித்தி<br>திருப்பலி (தேமொழி) | **மறைக்கல்வி (த)** காலை 8.45 -10.15 (சீ) கா 9.00-10.30<br>(ஆ) கா 10.45 -12.15 (தே.மொ) 10.45 -12.15<br>**முதியோர் கிறிஸ்துவ புகுமுக வகுப்பு** ( முகிபுவ)<br>காலை 9.00 - 10.30 ( தமிழ் ) காலை 11.00 - 12.30 ( தே. மொ )<br>காலை 11.00 - 12.30 ( ஆங்கிலம் ) காலை 9.00 - 10.30; (சீனம் ) |

நம்முடைய மினவுதல் தேவாலயத்திற்கு வருகை தந்திருக்கும் **புதிய பங்கு மக்கள், கல்லூரி மாணவர்கள், சிரம்பான் வட்டாரத்தில் புதிதாக குடியேறியிருக்கும் சகோதர சகோதரிகள் அனைவரையும் வரவேற்கிறோம்.** உங்களுக்கு அன்னை மரியாளின் பாடல் அடங்கிய செப அட்டை வழங்கப்படும். உங்களின் பெயர்களைப் பங்கு அலுவலகத்தில் பதிந்து கொள்ளவும் அல்லது serembanvisitation@gmail.com மின்னஞ்சல் வழியாக தொடர்பு கொள்ளவும்.

இன்று திருப்பலியை வழிநடத்திய புனித இரேணியுஸ் அதிச வினருக்கும் மற்றும் திருவழிபாட்டு குழுவினருக்கும் நமது நன்றிகள்.

**2018 ஏப்ரல் (பங்குனி) மாத செய்திகள்/நிகழ்வுகள்**
1) **பங்கு காணிக்கை:**
i) புனித வியாழன் 29 மார்ச் 2018 ரிம: 8,516.50
ii) புனித வெள்ளி 30 மார்ச் 2018 ரிம: 7,811.90
iii) புனித சனி: 31 மார்ச் 2018 ரிம: 10,437.20
iv) உயிர்ப்பு ஞாயிறு: 01 ஏப்ரல் 2018 ரிம: 13,623.20
இறைவன் அனைத்து தாராள உள்ளங்களையும் நிறைவாய் ஆசீர்வதிப்பாராக!

2) 07/08 திருப்பலிகளில் இரண்டாவது காணிக்கை சமூக அக்கறைப் பணிக்குழுவினரின் பணிக்காக எடுக்கப்படும்.
இறைவன் அனைத்து தாராள உள்ளங்களையும் நிறைவாய் ஆசீர்வதிப்பாராக!

**மரித்த ஆன்மாக்களுக்காக செபிப்போம்.**
N.சேவியர் நாயகம் (இறப்பு: 04/04/2018)
***முடிவில்லாத ஒளி இவர் மேல் ஒளிர்வதாக!***

- **முழு உபகார நிதியுதவியுடன் கல்வி பயில ஒரு வாய்ப்பு:**
  SKM Tahap 3 (Sijil Kemahiran Malaysia) at Kolej JSJ, Seremban. எஸ்.பி.எம் முடித்த மாணவர்கள் கணக்கியல் மற்றும் வரைவு திட்டப்படிப்பு தொடர்புக்கு: ஜோசப் ராஜன் 012-612 9732
- **எஸ்.பி.எம் முடித்த மாணவர்களுக்கு:** முழு உபகார நிதியுடன் அசுந்தா மருத்துவமனையில் தாதியர் பயிற்சி பயில வாய்ப்பு: தொடர்புக்கு: 03-7872 3078 அல்லது email:haspuniza@assunta.com.my
- **விசேச உறுதிப் பூசுதல் வகுப்பு 2018:** (ஆங்கிலம் & தேமொழி) உரிய வயதில் உறுதிப்பூசுதல் அருளடையாளம் பெறத் தவறிய அனைவரும் இதில் கலந்து கொள்ளலாம். உங்களுடைய பெயர்களை பங்கு அலுவலகத்தில் பதிந்து கொள்ளவும். வகுப்புகள் ஏப்ரல் 15, 2018 ஆரம்பமாக உள்ளன.
- புனித வாரத்தில் முழு ஒத்துழைப்புக் கொடுத்து ஈஸ்டர் கொண்டாட்டத்தை நல்ல முறையில் நடைபெற உதவிய திருவழிபாட்டுக் குழுவினருக்கும் மற்றும் உதவி செய்த அனைவருக்கும் நம்முடயை நன்றி உரித்தாகுக.
- புதிதாக திருமுழுக்குப் பெற்ற அனைவருக்கும் நம்முடைய பாராட்டுகள். கிறிஸ்துவ புகுமுக வகுப்பு ஆசிரியர் குழுவினருக்கு நம்முடைய நன்றிகள்.

- **WOW தண்ணீரில் நடை** - 48 மணி நேர நிகழ்ச்சி - ஏப்ரல் 27-(வெள்ளி) காலை 9.00 - 28 (சனி) காலை 9.00 வரை (மத்தேயு 14:28)

**பேதுரு:** "ஆண்டவரே, நீர் தாம் என்றால், நானும் கடல் மீது நடந்து உம்மிடம் வர ஆணையிடும்"
**இயேசு:** "வா" என்றார்.

பேதுருவைப் போல துணிவோடும் விசுவாசத்தோடும் அவரின் சீடர்களாக இயேசுவின் சமூகத்தினர் அனைவரையும் நாடிச் சென்றிடுவோம். ஏனென்றால், இயேசுவே "வா" என்று கட்டளையிடுகிறார்.
27 ஏப்ரல் இரவு 8.00 மணி - வீதியில் இருப்போருக்கு உணவளித்தல்
28 ஏப்ரல் காலை 9.00 மணி - வீட்டில் இருக்கும் நோயாளிகளைச் சந்தித்தல்
பகல் 1.00 மணி - ஏழை குடும்பங்களைச் சந்தித்து மகிழ்ச்சி பைகளை அளித்தல்
மகிழ்ச்சிப் பைகளை நிரப்பிடவும், சூப் கிச்சனுக்கும் நிதி உதவி தேவைப்படுகிறது. சூப் கிச்சன் மற்றும் நோயாளிகளைச் சந்திக்கவும் / மேலும் புகைப்படம் /ஒளிப்படம் எடுக்கவும் சமூக வலைத்தளத்தில் பகிரவும் தன்னார்வலர்கள் தேவைப்படுகின்றனர்.
தொடர்புக்கு: எட்வின் ஏூ (012-2059809) கிளென்: 010 2727169

- <u>தூதுரைப் பணி மாதம்</u> (பங்கு/அதிச அளவில்) மீட்பு சபை குருக்களால் நடத்தப்படும் (ஏப்ரல் 16 - மே 20 வரை)

அ) 16 ஏப்ரல் (திங்கள்) அதிச புனித சிசிலியா (சோன் 5) & புனித அல்பர்ட் (சோன் 1)
ஆ) 17 ஏப்ரல் (செவ்) அதிச புனித ஹிலாரி 2 (சோன் 3) & புனித அம்புரோஸ் (சோன்3)
இ) 18 ஏப்ரல் (புதன்) அதிச புனித ஹிலாரி 2 (சோன் 3) & புனித அலோசியஸ் (சோன் 5)
ஈ) 19 ஏப்ரல் ( வியா) அதிச புனித பேசில் (சோன் 3) & சிகாமட் கேம்ப் (சோன் 3)
உ) 20 ஏப்ரல் (வெள்ளி) அதிச புனித மார்கிரெட் ( சோன் 1)

**மேல் விவரங்களுக்கு உங்களுடைய சோன் பொறுப்பாளர்களைத் தொடர்பு கொள்ளவும்.**

- **தவக்கால உறைகள்:** உங்களுடைய தவக்கால காணிக்கைகள்ள பங்கு அலுவலகத்தில் அல்லது திருப்பலி நேர உண்டியலில் போடலாம்.
- **நினைவுப் புத்தகம் & வரலாற்று ஒளிவட்டு;** இந்த தயாரிப்பில் ஈடுபடும் குழுவினர்அனைவரையும் நம் செபங்களில் ஒப்புக்கொடுப்போம்
- **<u>மே மாதம் - செபமாலை மாதம் -</u>** அனைவரின் இல்லத்தில் அதிசக்களில் மற்றும் அதிச க்களில் நடைபெறும் திருப்பலிகளின் போதும் செபமாலை செபிப்போம்.
- **மினவுதல் மாதா திருவிழா - 170 ஆம் ஆண்டு கொண்டாட்டம்: நவநாள்: மே 23 - மே 31 வரை**
- **உதவும் கரங்கள்:** ஏப்ரல் 2018 முதல் நம் பங்கில் இலவசமாக கூடுதல் வகுப்புகள் தொடங்க உள்ளன. பாடங்கள்: வரலாறு, (படிவம் 5) கணக்கு (படிவம் 3) இதில் அதிகமான மாணவர்கள் சேர்ந்து பயின்று பயன்பெற அழைக்கிறோம். தொடர்புக்கு: பிரான்சிஸ் ஜேசு (012-2964 336) அல்லது ஹிலரி ஸ்டாமரியா (019-654 7347)
- மீண்டும் தேர்தல் வந்துவிட்டது: சிறந்த மலேசியாவை உருவாக்க 14 ஆம் பொதுத்தேர்தலை நம் செபங்களில் ஒப்புக்கொடுப்போம். இதையொட்டி, உங்களுக்குக் கேள்விகள் இருந்தால் வாருங்கள். தேர்தல் கூட்டம் நம்முடைய மினவுதல் தேவாலய மண்டபத்தில் நடைபெறுகிறது.

நாள்: 08-04-2018 காலை 10.30. **வந்து, கேளுங்கள்.**

- <u>குடியேற்ற வாசிகளின் ஈஸ்டர் விருந்து உபசரிப்பு</u> (15-04-2018) ஞாயிறு பகல் 2.00 எ 5.00 வரை - மினவுதல் தேவாலய மண்டபம்
- **<u>விவிலிய உருவாக்கப் பயிற்சி:</u> - மாற்கு நற்செய்தி விளக்கம்:**

மறைதிரு அந்தோணி மதலைமுத்து(இந்தியா) அவர்கள் வழங்குகிறார்.
மாமறை மாவட்ட ஏற்பாட்டில் நடைபெறும் இதில் வந்து கலந்து பயன்பெற அழைக்கிறோம்.
நாள்:21-04-2018 இடம்: மினவுதல் மாதா தேவாலய மண்டபம். நேரம்:காலை 9.00 -4.00 வரை
கட்டணம்: ரிம:20.00தொடர்புக்கு: விவிலியப் பணிக்குழுவினர்.

**ஈஸ்டர் வாழ்த்துகள்**